

தருமபுரி மாவட்டம் – பாப்பாரப்பட்டியில் விடுதலை போராட்ட வீரர் தியாகி சுப்ரமணிய சிவா அவர்களின் 98ஆவது நினைவுநாளையொட்டி அவரது நினைவிடத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி,சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி,எஸ்.பி.வெங்கடேஸ்வரன்,தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி,தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,மாநில விவசாய அணி துணை செயலாளர் சூடப்பட்டி சுப்ரமணி,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எம்.ஜி.சேகர்,தருமச்செல்வன்,மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வசதிக்காக ரூ5 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட பேட்டரி காரை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைச்சர்கள் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் கே.வி.முரளிதரன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பா.சீபாஸ்கல்யாண், மாவட்ட வன அலுவலர் திரு.ராம்மோகன், கூடுதல் ஆட்சியர் என்.ஓ.சுகபுத்ராஇந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்திருமகள், திருத்தணி நகராட்சி மன்ற தலைவர் சரஸ்வதி பூபதிஇணை ஆணையர் திருமதி.ரமணி, துணை ஆணையர் விஜயா, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### கடந்த 3 ஆண்டுகளில் சுங்கம்- வருவாய்ப் பிரிவினரால் பல்வேறு

# துறைமுகங்களில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு என்ன?

### மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 24-

நாட்டிலுள்ள பல்வேறு துறைமுகங்களில் குறிப்பாக தனியார் துறைமுகங்களில் 24/7 பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பை வழங்குவது குறித்தும் சட்டவிரோதமாக கடத்தப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட தடைசெய்யப்பட்ட பொருட்கள் அதன் மதிப்பு குறித்தும் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



அதன் விவரம் வருமாறு:-

நாட்டிலுள்ள பல்வேறு துறைமுகங்களில் குறிப்பாக தனியார் துறைமுகங்களில் சுங்கம் மற்றும் வருவாய் புலனாய்வு போன்ற அரசு நிறுவனங்களால் 24/7 பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பை வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

தடைசெய்யப்பட்ட பொருட்கள் சட்டவிரோதமாக கடத்தப்படுவது பற்றி ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா? வழக்கமான இறக்குமதி அல்லது ஏற்றுமதி போல் காட்டிக் கொண்டு செல்லப்படுகிறது:

அப்படியானால், கடந்த மூன்று ஆண்டுகளில் சுங்கம் மற்றும் வருவாய் புலனாய்வுப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் விவரங்களுடன் நாட்டின் பல்வேறு துறைமுகங்களில் பதிவாகிய/கவனிக்கப்பட்ட இது போன்ற நிகழ்வுகளின் விவரங்கள் யாவை?

கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு துறைமுகங்களில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு, ஆண்டு மற்றும்துறைமுகம் வாரியாக?

இவ்வாறு அவர் வினா எழுப்பினார்.

அதற்கு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்த சோனோவால் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

முக்கிய துறைமுகங்கள் துறைமுக அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. கப்பல் மற்றும் நீர்வழிகள். நாட்டின் முக்கிய துறைமுகங்களுக்கு மத்திய தொழில் பாதுகாப்புப் படை பாதுகாப்பு அளித்து வருகிறது. பெரிய துறைமுகங்களில் உள்ள டெர்மினல்கள், எக்ஸ்ரே கண்டெய்னர் ஸ்கேனர் மற்றும் மொபைல் ஸ்கேனர் மூலம் டிரைவ் மூலம் சரக்குகளை ஸ்கேன் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள முக்கிய துறைமுகங்கள் (அல்லாத பெரிய துறைமுகங்கள்) தவிர மற்ற துறைமுகங்கள் மாநில அரசு/மாநில கடல் சார் வாரியங்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

11.03.2016 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் முக்கிய துறைமுகங்கள் (பெரிய அல்லாத துறைமுகங்கள்) தவிர மற்ற அனைத்து துறைமுகங்களிலும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை இணங்குவதற்காக உள்துறை அமைச்சகம் விநியோகித்துள்ளது.

சுங்கத் துறை, மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் துறைமுகங்களில் ஒரு சட்ட அமலாக்க நிறுவனம் ஆகும். பல்வேறு கடல் துறைமுகங்களில் தடைசெய்யப்பட்ட பொருட்களின் பறிமுதல் விவரங்களை பார்க்கும் போது அதிக மதிப்புள்ள எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் மற்றும் எலெக்ட்ரிக் பொருட்கள் இருப்பது தெரிகிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

# முதலமைச்சரின் முயற்சியால் காவிரியிலிருந்து தண்ணீர் திறப்பு!

### நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

தஞ்சை, ஜூலை 24 -

முதலமைச்சரின் முயற்சியால் காவிரியிலிருந்து கர்நாடகா தண்ணீர் திறந்துவிட்டுள்ளதாக, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் 140 கோடி ரூபாய் நிதியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் நடைபெற்று முடிந்த பணிகளை, நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு செய்தார்.

இதையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 27 ஆம் தேதி திருச்சியில் விவசாயத்திற்கான நவீன கருவிகளைக் கொண்ட விவசாய சங்கமம் என்ற தமிழ்நாடு அரசு கண்காட்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளதாக தெரிவித்தார்.



மேலும், தஞ்சையில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட பல்வேறு பணிகளையும் முதலமைச்சர் திறந்து வைக்க உள்ளதாக கூறினார்.

முதலமைச்சரின் முயற்சியால் காவிரியிலிருந்து கர்நாடகா தண்ணீர் திறந்துவிட்டுள்ளதாகவும் அமைச்சர் கே.என்.நேரு குறிப்பிட்டார்.






### பகுதிப் பிரதிநிதி என்.சங்கர் ஏற்பாட்டில்

# நடராஜன் ராமச்சந்திரன் இரவு பாடசாலை!

### கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சென்னை,ஜூலை.,24-

கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் நடராசன் ராமச்சந்திரன் அவர்களின் பெயரில் இரவு பாடசாலை துவக்கு விழா திருவொற்றியூர் 14வது வட்டக்கழகத்தில் சிறப்பாக நடைபெற்றது.இந்த விழாவில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர், கலந்து கொண்டு இரவு பாடசாலையை திறந்து வைத்து அறுசுவை இரவு உணவை வழங்கினார்.

நிகழ்ச்சி ஏற்பாடு 14வது வட்டக் கழகப் பிரதிநிதி சிவகங்காபுரம் என்.சங்கர், இந்த நிகழ்வில் 5வது வட்ட மாமன்ற உறுப்பினர் வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சொக்கலிங்கம், 14வது வட்ட மாமன்ற உறுப்பினர் ஆர்.பானுமதி சந்தர், 14வது வட்டக் கழகச் செயலாளர் இரா.சந்தர், 14வது (அ)வட்ட கழகச் செயலாளர் ஏகா.கார்த்திகேயன்,

மாவட்ட கழக பிரதிநிதிகள் பி.எஸ்.சைலஸ், கே.கார்த்திகேயன், எம்.அப்துல் சலீம், குட்டி (எ) எத்திராஜ், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாவட்ட அமைப்பாளர் கு.தமிழ்மணி, சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பா.பாலஉமாபதி, கிழக்கு பகுதி மீனவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.பிரகாஷ், 14வது வட்டக் கழகம் நிர்வாகிகள் எஸ்.நாராயணன், அருள், பாபு, மகாலிங்கம், அருளானந்தன், குப்பன், ஹேமலதா, கருணாகரன், ராஜா, செல்வராஜ், மணி, முருகன், நித்தியானந்தம், ஆறுமுகம், கதிரவன், ஃப்ரூட்ஸ், செல்வதாஸ், வாசுகி, பிரேம், நக்கீரன், கெங்கன், வேலு, விமல், அசோக்குமார், மேற்கு பகுதி மீனவர் அணி அமைப்பாளர் எஸ்.செல்வம், மேற்கு பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் நிர்மல்தாஸ், மைக்கேல், பந்தய சேகர், விமல், எஸ்.விஜயராகவன், ராஜா, வாழப்பாடி செந்தில், உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகளும் மகளிரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியை போட்டோ செந்தில், தொகுத்து வழங்கினார்.

இறுதியாக கே.விஸ்வநாதன், நன்றி கூறினார்.